# இலங்கையிலுள்ள அருங்காட்சியகங்களில் இந்துசமயத் தெய்வ வடிவங்கள்: பொலனறுவை மற்றும் கொழும்பு அருங்காட்சியகங்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**Vinothini, T***

**ஆய்வு சுருக்கம்**

இந்து சமயமானது, தத்துவம், கலை, ஆன்மிகம், வாழ்வியல் மற்றும் அறிவியல் சார்ந்த அகன்ற பரப்பை உடையது. இந்துநாகரிகத்தின் சீரிய பண்புகளை அறிந்து கொள்வதற்கு தொல்லியற் சின்னங்கள் சிறப்பானதொரு மூலமாகும். 10ஆம் நூற்றாண்டு முதலாகத் தமிழகத்தில் வழக்கிலிருந்த ஆலய வழிபாட்டு நெறிகளையும் கட்டிட-சிற்ப முறைகளையும் இலக்கிய மரபுகளையும் தமிழ்நாட்டில் இருந்து வந்து இலங்கையில் குடிபுகுந்தவர்கள் இங்கு அறிமுகம் செய்தனர். அதன் பயனாக இலங்கையில் இந்து கலாசாரத்தை பிரதிபலிக்கும் வகையில் அக்காலத்துக் கோயில்களும், அவற்றிலே தெய்வ வடிவங்கள் அமைக்கும் முறையும் வளர்ச்சிபெற்றது. அருங்காட்சியகம் என்பது அரிய, அருகிய பொருட்களைத் தன்னகத்தே சேகரித்து வைத்திருக்கும் கூடமாகும். வரலாற்று அம்சங்களை தனியே எழுத்துருவில் மட்டும் காண்பதைவிட அவற்றினைப் பொருளாகக் காண்கின்றபோது அவற்றின் மூலமாக ஏற்படுத்தப்படும் தாக்கம் பாரிய அளவில் அமையும். பொருட்கள் மற்றும் ஆவணங்களைச் சேகரித்தல், அவற்றை ஆவணப்படுத்தல், பாதுகாத்தல், அவற்றைக் காட்சிக்கு வைத்தல் மற்றும் காட்சிப் பொருள்களைப் பற்றி ஆய்வு செய்தல் முதலான பணிகளை அருங்காட்சியகங்கள் மேற்கொண்டு வருகின்றன. அந்தவகையில் இலங்கையில் தொன்மைக்காலம் முதல் இன்றுவரை இந்துசமயம் நிலைபெற்றுள்ளது என்பதனை எடுத்துக்காட்டும் பிரதான சான்றுகளாக தெய்வவடிவங்கள், கல்வெட்டுக்கள், நாணயங்கள், ஓலைச்சுவடிகள், இலக்கியங்கள் என்பன காணப்பட்ட போதிலும், அவற்றில் முக்கியமான ஒன்றாக இந்துத் தெய்வ வடிவங்கள் விளங்குகின்றன. இங்கு ஆய்விற்காக இந்துசமயத் தெய்வங்களின் வடிவங்கள் மட்டுமே எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இந்துநாகரிகக் கற்கை நெறியினைப் பொறுத்தவரையில் தெய்வங்களின் வடிவங்களும், அவற்றின் கலையம்சங்களும் பிரதானமானவையாகும். இவ்வடிவங்களில் அரியனவற்றைப் பேணிப்பாதுகாக்கும் பணியினை இலங்கையிலுள்ள பல்வேறு அருங்காட்சியகங்கள் ஆற்றிவருகின்றன. இதற்கு பொலனறுவை மற்றும் கொழும்பில் அமைந்துள்ள அருங்காட்சியகங்கள் சிறந்த எடுத்துக்காட்டுக்களாகும். ஆகவே இவ் அருங்காட்சியகங்களை மையப்படுத்தி இலங்கையில் இந்துசமயத்தின் வளர்ச்சியினையும், இந்துசமயத் தெய்வ வடிவங்களின் வாயிலாக வெளிப்படுத்தப்படுகின்ற கலைமரபுகளையும் தனியே பாடவிதானத்தில் கற்பதோடு மட்டுமல்லாமல் நேரடியாக சென்று அவதானிப்பதனூடாக இந்துசமயத்தின் மகத்துவம் மற்றும் இந்துக்கலைகள் பற்றிய தெளிவான அறிவினையும் பெற்றுக்கொள்ளக்கூடியதுடன், அதற்கு அருங்காட்சியகங்கள் எவ்வகையில் தனது வகிபாகத்தை வழங்குகின்றது என்பனவற்றை வரலாற்று, விபரண மற்றும் களஆய்வு முறையியல்களை அடிப்படையாகக் கொண்டு ஆராய்வதாக இவ் ஆய்வுக் கட்டுரை அமைந்துள்ளது.

**பிரதான சொற்கள்:** இந்துசமயம், வடிவங்கள், அருங்காட்சியகம், பொலனறுவை, கொழும்பு

To whom correspondence should be addressed: vvinothini0@gmail.com

*Department of Hindu Civilization, Eastern University of Sri Lanka.